## இயல் 1: செய்யுள் - எங்கள் தமிழ்

**வகுப்பு** : VIII

**பாடம்** : **தமிழ்**

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக**

1. மக்கள் வாழும் நெறிப்பகுதியைக் குறிக்கும் சொல்

   **விடை**: வைப்பு

2. என்றென்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   **விடை**: என்று + என்றும்

3. 'வானமளந்தது ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   **விடை**: வானம் + அளந்தது

4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்

   **விடை**: அறிந்ததனைத்தும்

5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் **விடை**: வானமறிந்த

**ஆ. தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**

| | |
|---|---|
| வாழ்க | வாழிய |
| எங்கள் | என்றென்றும் |
| வானமளந்தது | வண்மொழி |
| வாழ்க | வாழ்க |

**இ. குறுவினா.**

1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

தமிழ் ஏழு கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்டு வாழ்கிறது.

AAMSKOSAVAPATTY

2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து தமிழ்மொழி மேன்மேலும் வளர்கிறது.

## ஈ. சிறுவினா

1. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

- தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று விளங்கும் மொழி
- ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான மொழி
- ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்ட மொழி
- உலகம் உள்ள வரையில் எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருளை நீங்கி மேன்மையுற்று சிறப்படைந்த மொழி.
- பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கி ஒளிரச் செய்த மொழி
- வானம் வரை உள்ளங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் மொழி என தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறியுள்ளார்.

## உ. சிந்தனை வினா

1. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

- தமிழ்மொழி வளமையான மொழி ஆகும்.
- எக்காலத்துக்கும் நிலைபெற்று விளங்கும் மொழி ஆகும்.
- எல்லா இடங்களிலும் இலக்கிய மணத்தை பரவச் செய்யும் மொழி ஆகும்.
- மக்களின் அறியாமையை நீக்குகின்ற மொழி ஆகும்.

AAMSKOSAVAPATTY

- உலகமும், தமிழ் மக்களும் இருக்கும் வரை தமிழ்மொழி அழியாமல் இருக்கும். எனவே பாரதியார் தமிழை வண்மொழி என்று கூறுகிறார்.

### இயல் 1 : செய்யுள் - தமிழ்மொழி மரபு

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

1. பறவைகள் விசும்பில் பறந்து செல்கின்றன.
2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் மரபு
3. இருதிணை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது இரண்டு + திணை
4. ஐம்பால் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ஐந்து + பால்

## ஆ. குறுவினா.

1. உலகம் எவற்றால் ஆனது?

நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐம்பூதங்களால் ஆனது இவ்வுலகம்.

2. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

- திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும்.
- இம்மரபான சொற்களை செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.
- தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

AAMS KOSAVAPATTY

## இ. சிந்தனை வினா.

**1. நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

- உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும், ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு
- திணை, பால் வேறுபாடு அறிந்து இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும்.
- இம்மரபுச் சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.
- தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்
- எனவே தான் நம் முன்னோர்கள் பின்பற்றி வந்த மரபுகளை மாற்றாமல் அதனையே நாம் இன்றும் பின்பற்றுகின்றோம்.

### இயல் 1 : உரைநடை - தமிழ் வரிவடிவ வளர்ச்சி

## அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக

1. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற அச்சுக்கலை காரணமாக அமைந்தது.

2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து வட்டெழுத்து என அழைக்கப்படுகிறது.

3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் தந்தை பெரியார்.

## ஆ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் கண்ணெழுத்துகள் என அழைக்கப்பட்டன.

AAMS KOSAVAPATTY

2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் வீரமாமுனிவர்.

## இ. குறுவினா.

1. ஓவிய எழுத்து என்றால் என்ன?

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது.

இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?

- ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது.
- அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று.
- இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

3. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?

ஓலைகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிமாகப் பயன்படுத்தினர்.

4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக?

- தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்
- எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார்.

AAMSKOSAVAPATTY

- எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.

## ஈ. சிறுவினா

### 1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக?

- ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்து விடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
- ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.
- புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா, உயிர்மெய்யா, குறிலா, நெடிலா என உணர வேண்டி நிலை இருந்தது.
- இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர். எனவே, எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

### 2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

- நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகிறது.
- ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை)பயன்படுகின்றது.
- ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுகின்றது.

AAMSKOSAVAPATTY

- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்து விட்டது.

## உ. நெடுவினா

### 1. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக?

**பேச்சுமொழி:**

- மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்த சைகைகளைப் பயன்படுத்தினார்கள்.
- காலப்போக்கில் குரலைப் பயன்படுத்தி ஒலிகள் மூலம் தனது கருத்துகளை வெளிப்படுத்தினான். அவை பண்பட்டுப் பேச்சுமொழி உருவானது.

**எழுத்துகளின் தோற்றம்:**

- மனிதன் தனக்குப்பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க பாறைகளிலும், குகைச் சவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தனர். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

**தமிழ் எழுத்துகள்:**

- காலந்தோறும் தமிழ் எழுத்துகளின் வரி வடிவங்கள் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வளர்ச்சி அடைந்து வந்துள்ளன.
- அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.
- தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவங்களைக் கோவில்களில் கருங்கல், சுவர்கள், செப்பேடுகள் போன்றவற்றில் காணலாம்.

AAMSKOSAVAPATTY

**வரிவடிவ வளர்ச்சி:**

- அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன.
- பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது. அதனால் நேர்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.
- எழுத்துகளை அழகுபடுத்துவற்காக மேற்பகுதியில் குறுக்கக்கோடு இடப்பட்டது. அவையே நிலையான வடிவங்களாக மாறிவிட்டன.

**உருவ மாற்றம்;**

- நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் பயன்படுகின்றது.
- ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இணைக்கொம்பு (ை) பயன்படுகிறது.
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் இல்லை.

**எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டவர்கள்:**

வீரமாமுனிவர் எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை நீக்கினார். னா, ணா என்னும் எழுத்துகளை அச்சிடுவதற்கு கடினமாக இருந்தால் னா, ணா என எழுதும் திருத்தம் கொண்டு வந்தவர் பெரியார்.

**ஊ. சிந்தனை வினா**

**1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

- பரிசு அளிக்கும்போது நல்ல தமிழ்ப்புத்தகங்களை அளித்தல்.

  விழாக்களுக்கு அடிக்கும் அழைப்பிதழைத் தமிழில் மட்டுமே அச்சிடுதல்.
- தொலைபேசியில் பேசும்போது முதலில் ஹலோ என்பதை விட்டுவிட்டு வணக்கம் என்ற சொல்லி ஆரம்பித்தல்.
- மகிழுந்துகளில் செல்லக் குழந்தைகளின் பெயரை எழுத விருப்பப்பட்டால் தமிழில் மட்டும் எழுதுதல்.
- தமிழ்நாட்டில் குழந்தைகளை தமிழில் படிக்க வைக்க விருப்பம் இல்லை என்றால் குறைந்தப்பட்சம் மொழிப்பாடம் தேர்வு செய்யும் போது தமிழ் மொழிப்பாடத்தை தேர்வு செய்தல் வேண்டும்.

**2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து விவாதிக்கவும்.**

- உரோம எழுத்துகள் இன்று உலகில் அதிகமாக பயன்படத்தப்படும் நெடுங்கணக்கு எழுத்து முறை ஆகும்.
- இது பண்டைய உரோமர்களால் பயன்படுத்தப்பட்டது.
- வேற்றுமொழி சொற்கள் இல்லாமல் எழுதுதல் தனித்தமிழ்.
- ஆனால் அப்படிப்பட்ட தனித்தமிழ் எப்பொழுதும் எங்கும் இருந்தது இல்லை. தமிழால் வேற்றுமொழி கலப்பு இல்லாமல் தனித்து இயங்க முடியும். மாணவர்களிடம் தமிழின் மீதுள்ள ஆர்வத்தைக் குறைத்து வேற்றுமொழியின் மீது ஆர்வத்தைத் தூண்டுகிறோம்.

AAMSKOSAVAPATTY

## இயல் - 1 விரிவானம் - சொற்பூங்கா

**1. தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

மொழி வளரும் தன்மை உடையது, புதிதாக இலக்கியங்கள் தோன்றுவது போலவே புதிய சொற்களும் தோன்றுகின்றன. ஒரு வேர்ச்சொல்லில் இருந்து பல சொற்கள் கிளைத்துப் பெருகுவது மொழி வளர்ச்சியின் அடையாளம் ஆகும்.

**சொல் தோன்றிய காலம்:**

கல்லின் தேய்மானம் போலச் சொல்லுக்கும் தேய்மானம் உண்டு. கல் தோன்றிய காலம், உயிரோட்ட இயக்கம் இவற்றைப் போலச் சொல் தோன்றிய காலம், இயக்கம் ஆகியவற்றால் சொல்லும் தேய்தல் இயற்கையானது. "சொல்" என்பதற்கு நெல் என்பது ஒரு பொருள். நெல்லில் பதர் உண்டு. ஆனால் சொல்லில் பதர் இருக்கலாகாது.

**எழுத்து மொழியின் வகை:**

மொழி என்றால் சொல் என்று பொருள். ஓர் எழுத்து மொழி ஈரெழுத்து மொழி, இரண்டுக்குமேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகைப்படும்.

குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை. நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார். நொ. து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார் நன்னூலார்.

**வார்த்தைகளின் துவக்கம்:**

மா என்பது பெரிய என்று பொருள்

பெருமக்கள் பெரிதும் கூடும் அவையே "மாநாடு" என்று அழைத்தனர்.

பல குறுநிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை "மாநிலம்"

AAMSKOSAVAPATTY

என்று அழைத்தனர்.

உலகப் பெரும் பரப்பை மாஞாலம் என்று அழைத்தனர். ஆன் என்பது ஆ ஆகியது. மான் என்பது மா ஆகியது. கோன் என்பது கோ ஆகியது. தேன் என்பத தே ஆகியது. பேய் என்பது பே ஆகியது. கால வெள்ளத்தில் கரைந்து தேய்ந்தது.

ஏ என்றால் ஏவும் அம்பு என்று பொருள். அம்பைப் போல் விரைவாய் செயல்பட்டவன் "ஏவலன்" என்றும். அம்பு விடும் கலையை "ஏகலை" என்றும் அதில் வல்லவனை "ஏகலைவன்" என்றும் பாராட்டினர்.

முடிவுரை:

கால வெள்ளத்தில் கரைந்தும், வளர்ந்தும் நிற்கும் நம் தமிழ் மொழியை மொழிப்பற்றுள்ள ஒருவனே வளர்ப்பான். அதன் இனத்தை பண்பாட்டைக் காப்பான்.

## இயல் 1 : இலக்கணம் - எழுத்துகளின் பிறப்பு

அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் உ, ஊ
2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் தலை
3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் மார்பு
4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் ட், ண்
5. கீழ் இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து வ்

ஆ. பொருத்துக.

1. க், ங் - நாவின் முதல், அண்ணத்தின் அடி
2. ச், ஞ் - நாவின் இடை, அண்ணத்தின் இடை
3. ட், ண் -நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

AAMS KOSAVAPATTY

4. த், ந் - நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

## இ. சிறுவினா.

**1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**

உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய், ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.

இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

**2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

வல்லின மெய் எழுத்துகள் (க, ச, ட, த, ப, ற) ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் (ங, ஞ, ண, ந, ம, ன) ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

இடையின மெய் எழுத்துகள் (ய, ர. ல, வ, ழ, ள) ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**3. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக?**

ழகர மெய் - மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன,

லகர மெய் - மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.

ளகர மெய் - மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

AAMSKOSAVAPATTY

## மொழியை ஆள்வோம்

### 1. அகரவரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ, ஈசன், ஐயம்.

**விடை**

அழகுணர்ச்சி, ஆரம் நீ, இரண்டல்ல, ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்,

### 2. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.கோழி - கொக்கரிக்கும்

2. பால் - பருகு

3. சோறு - உண்

4. பூ - கொய்

5. ஆ - நிரை

### 3. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்கப் புறப்பட்டாள்.

**விடை:**

சேவல் கூவும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூக்கொய்ய நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கூவிக் கொண்டிருந்தது. பூவைக் கொய்தவுடன், தோரணம் கட்ட

AAMSKOSAVAPATTY

மாவிலையையும் பறித்துக் கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைப் பருகிவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

**4. நான் விரும்பும் கவிஞர் பற்றி கட்டுரை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

முன்னுரை

இளமைப் பருவம்

விடுதலை வேட்கை

நாட்டுப்பற்று

சமுதாயத் தொண்டு

தேசிய ஒருமைப்பாடு

முடிவுரை

**முன்னுரை:**

"பாட்டுக்கொரு புலவன் பாரதி" என்று அனைவராலும் போற்றப்படுபவர் மகாகவி பாரதியாரே ஆவார். அவருடைய பாடல்கள் மக்களிடையே நாட்டு விடுதலையையும், தேசிய ஒருமைப்பாட்டையும், சாதி ஒழிப்பையும், பெண்விடுதலையையும் ஏற்படுத்தின. பாட்டுத்திறத்தால் இவ்வையகத்தை ஆட்டிப் படைத்த பாரதியே நான் விரும்பும் கவிஞராவார்.

**இளமைப்பருவம்**

பாரதியார் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் சின்னச்சாமி இலக்குமி அம்மாள் ஆவர். இவர் தம் 11 ஆம் வயதிலேயே கவிதை புனைந்து பாரதி என்ற பட்டம் பெற்றார்.

**விடுதலை வேட்கை:**

"என்று தணியும் எங்கள் சுதந்தர தாகம்" - என்ற பாடலும்

"ஆயிரம் உண்டிங்கு சாதி - எனில்

AAMSKOSAVAPATTY

அன்னியர் வந்துபுகல்என்ன நீதி" - என்ற பாடலும்

நாட்டு மக்களிடையே விடுதலை உணர்வையும், ஆங்கில ஆதிக்கத்தின் மீது எதிர்ப்பையும் ஏற்படுத்தின.

## நாட்டுப்பற்று"

"பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு"

"பாரத நாடு பழம்பெரும்நாடு - நீரதன்

புதல்வர் அந்நினை வகற்றாதீர்"

என்னும் பாடல்கள் நாட்டு மக்களிடையே நாட்டுப்பற்றை உண்டாக்கின.

## சமுதாயத் தொண்டு:

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சாதி ஒழிப்பை உணர்த்தினார்.

"மாதர்தம்மை இழிவுசெய்யும் மடைமையைக் கொளுத்துவோம்"

என்று பெண் விடுதலையைப் பாடினார்.

"தனியொருவனுக்குக் உணவில்லை யெனில்

சகத்தினை அழித்திடுவோம்"

என்று சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

## தேசிய ஒருமைப்பாடு

"முப்பது கோடி முகமுடை யாள்உயிர்

மொய்ம்புற ஒன்றுடையாள்" - என்னும் பாடலும்

"எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓர்நிறை

எல்லாரும் இந்நாட்டு மன்னர்" - என்னும் பாடலும்

தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.

## முடிவுரை

மகாகவியாக விளங்கிய பாரதி 11.09.1921 அன்று மண்ணுலகைவிட்டு விண்ணுலகை அடைந்தார். பாரதி காட்டிய வழியைப் பின்பற்றி வீடும் நாடும் நலம் பெறச் செய்வோம்.

AAMS KOSAVAPATTY

5. பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக

கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை, ஈ, பசு, படம், பல், படல், கை, பக்கம், பா

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள்<br>கிழமைகள்<br>கடல்கள்<br>கைகள் | பூக்கள்<br>ஈக்கள்<br>பசுக்கள்<br>பாக்கள் | மரங்கள்<br>மாதங்கள்<br>படங்கள்<br>பக்கங்கள் | கற்கள்<br>புற்கள்<br>சொற்கள்<br>பற்கள் |

6. ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

1. படி - கண்ணன் மாடிப்படியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

2. திங்கள் - சித்திரைத் திங்களில் முழு திங்கள் தோன்றும் நாள் திங்கட்கிழமை மிகவும் சிறப்பான நாளாகக் கருதப்பட்டது.

3. ஆறு - ஆற்றங்கரையோரம் ஆறு மரக்கன்றுகள் நட்டேன்.

7. சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக.

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.

வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்

2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ள வரையிலும்.

தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழட்டும்.

3. வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.

பகைவரை வென்றதை பாடும் இலக்கியம் பரணி ஆகும்.

4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.

உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்

AAMSKOSAVAPATHY

5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

அம்புவிடும் கலையை ஏகலை என்றது தமிழ்.

AAMS KOSAVAPATTY